# வண்ணாரப்பேட்டை -விமானநிலையம் இடையே 5 நிமிடத்துக்கு ஒரு ரெயில்

## மெட்ரோ நிறுவனம் அறிவிப்பு

சென்னை, ஆக.27–
சென்னை மெட்ரோ நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

★ வண்ணாரப்பேட்டையில் இருந்து எல்.ஐ.சி. வழியாக விமான நிலையம் செல்லும் வழித்தடத்தில் பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளதால், கூட்ட நெரிசலான நேரங்களில் (காலை 8 மணி முதல் 11 மணி வரை மற்றும் மாலை 5 மணி முதல் 8 மணி வரை) 5 நிமிடங்களுக்கு ஒரு மெட்ரோ ரெயிலும், மற்ற நேரங்களில் 7 நிமிடங்களுக்கு ஒரு மெட்ரோ ரெயிலும் இயக்கப்படும். மேலும் இந்த வழித்தடத்தில் விடுமுறை நாட்களில்( சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை)7 நிமிடத்துக்கு ஒரு மெட்ரோ ரெயில் இயக்கப்படும்.

★ சென்டிரலில் இருந்து கோயம்பேடு வழியாக பரங்கிமலை வரை செல்லும் வழித்தடத்தில் கூட்ட நெரிசலான நேரங்களில் 10 நிமிடத்துக்கு ஒரு மெட்ரோ ரெயிலும், மற்ற நேரங்களில் 14 நிமிடங்களுக்கு ஒரு மெட்ரோ ரெயிலும் இயக்கப்படும். மேலும் இந்த வழித்தடத்தில் விடுமுறை நாட்களில் 14 நிமிடங்களுக்கு ஒரு மெட்ரோ ரெயில் இயக்கப்படும்.

★ ஆலந்தூரில் இருந்து கோயம்பேடு வழியாக சென்டிரலுக்கு கூட்ட நெரிசல் நேரங்களில் 5 நிமிடத்துக்கு ஒரு மெட்ரோ ரெயிலும், மற்ற நேரங்களில் 7 நிமிடத்துக்கு ஒரு மெட்ரோ ரெயிலும் இயக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.